**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 280/2020 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | **அ.சா. 1** |
| Name : | **திருமதி. மகாலட்சுமி** |
| Father's Name/Husband Name: | **திரு. இளங்கோவன்** |
| Village : | அத்தியூர் |
| Taluk : | **குன்னம்** |
| Age : | 37 / 2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.09.2025

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. B. ஆனந்தன் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 முதல் 2 ஆஜர் இல்லை கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புகாரை யார் எழுதினார்கள் என்றால் போலிசார் எழுதினார்கள். அந்த புகாரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அரசு மருத்துவமனையில் மருத்துவரிடம் என்னை 5 நபர்கள் தாக்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் சொல்லிக்கொடுத்ததை தான் நான் நீதிமன்றத்தில் முதல் நிலை சாட்சியத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் என்னை ஆபாச வார்த்தைகளால் பேசவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல் எதிரிகள் என்னையும், என் கணவரையும் இரும்புக் கம்பியால் அடிக்கவில்லை என்றால் சரிதான். **சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

தற்போது நானும், என் கணவரும் எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டோம். சமாதானம் மனுவில் கையெழுத்திட்டு தாக்கல் செய்யவில்லை. நான் முதல்

விசாரணையில் கூறிய விவரங்கள் தான் உண்மை என்றும், எதிரிகளுடன் சமாதானம் ஆகிவிட்டபடியால் அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்றுவதற்கான உண்மையை மறைத்து குறுக்கு விசாரணையில் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.